CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

திருமூலதேவ நாயனார் அருளிய

பத்தாம் திருமுறை

திருமந்திர மாலை



வெளியீடு :

தருமை ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ

குருபாதம்

திருமூலதேவ நாயனார் அருளிய
பத்தாம் திருமுறை
திருமந்திர மாலை

(முழுவதும்)

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்
27 ஆவது குருமகாசந்நிதானம்
திருமுறைச் செப்பேடு கண்டருளிய
ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
திருவுளப்பாங்கின் வண்ணம்

தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான
திருபுவனம் ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்
ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி உடனாகிய ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி
ஸ்ரீ சரபேசுவர சுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகப்
பெருவிழாவில் வெளியிடப்பட்டது.
நாள் : 02.02.2024

ஞானசம்பந்தம் பதிப்பகம் தருமபுரம் ஆதீனம்
மயிலாடுதுறை 609001

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதற்பதிப்பு : 2024
வெளியீடு நாள் : 02.02.2024
இடம் : ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்
திருபுவனம், திருவிடைமருதூர் வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம்

பதிப்பகம் : ஞானசம்பந்தம் பதிப்பகம்
தருமபுரம் ஆதீனம்
மயிலாடுதுறை
உரிமை : தருமை ஆதீனம்
பக்கம் : xxiv + 456
நூலின் அளவு : டெம்மி (1/8)
தாள் : மேப் லித்தோ (70gsm)
வடிவமைப்பு : தருமை ஒலி, ஒளிப் பதிவகம்.

விலை தனிப்பிரதி : உரு. 150/.
ப.தி. முழுத்தொகுப்பு : உரு. 800/.

பன்னிரு திருமுறை முழுத்தொகுப்பு மூலம் மட்டும்
(எட்டு நூல்கள்) மிகமிக குறைந்த விலையில்
உரு. 800/-க்கு கொடுக்கப்படுகிறது.
இத்தொகையும் மறுபதிப்பு செய்வதற்கு பயன்படுத்தப்படும்.

நூல் கிடைக்குமிடம்
தருமை ஆதீனம் நூல் நிலையம்
தருமபுரம் அஞ்சல், மயிலாடுதுறை மாவட்டம் - 606 001
தமிழ்நாடு, இந்தியா

அலைபேசி - 98946 82337

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீன குருமுதல்வர்



'திருமுறைகளோதாய் மனமே உனக்கென்ன வாய்'

என்று அருளிய

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம்

திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த

ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்
27 ஆவது குருமகாசந்நிதானம்
திருமுறைச் செப்பேடு கண்டருளிய
ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

ஆசியுரை

ஆசையறாய் பாசம் விடாய் ஆன சிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்

- சிவபோக சாரம்

முழுமுதற் கடவுளாகிய பரசிவத்திற்கு சொரூபம், தடத்தம் என்று பதி இலக்கணம் உண்டு. தன்னிலையில் சுட்டொணாத் தன்மையில் சொரூபமாகவும், ஆன்மாக்கள் ஈடேற்றம் பெற அருள் காரணமாக ஐந்தொழில் புரிவதற்கு தடத்த வடிவமாகவும் இறைவன் விளங்குகின்றான். இதனை சிறப்பு, பொது என்பர். தன்னிலை, முன்னிலை, படர்க்கை என்று இறைவன் எங்கும் எப்பொழுதும் நிறைந்து விளங்குவதை "ஒன்றாய், உடனாய், வேறாய் என்ற வகையில் தோத்திர சாத்திரங்கள் காட்டுகின்றன. இதனை "தோடுடைய செவியன்" என்று பெருமானின் அடையாளங்களை சுட்டிக்காட்டியும், "உள்ளம் கவர்கள்வன்" என்று ஒன்றாய் உறைவதையும், "பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே" என்று முன்நின்று அருளுவதையும் முதல் தேவாரத்திலேயே திருஞானசம்பந்தர் பாடி அருளி, பின்னும் "ஈறாய் முதல் ஒன்றாய் ...... வேறாய் உடனானான்" என்றும் காட்டுகின்றார். அருள் வடிவங்கள் குரு, இலிங்க, சங்கமம் என்று மூவகையாகும். ஞானம் வழங்குதல் பொருட்டு குருவுருவாகவும், அற, மறக் கருணை புரிய வேக, போக, யோக வடிவங்களாகவும், அடியார்களை ஆட்கொள்ள சங்கம வடிவமாகவும், திருவேடமாகிய பூதி, கண்டிகை, திருவைந்தெழுத்தின் சொரூபமாகவும் சிவபெருமான் விளங்குகின்றான். அவனை நாம் தரிசிப்பதற்கு மூர்த்தி, தலம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding: Tattva Heritage Foundation, Kolkatta

தீர்த்தத்தால் சிறப்புடைய திருத்தலங்கள் தோறும் காட்சித்தருகின்றான். அவனை நாம் அடைவதற்கு தடையாக உள்ள ஆசை, முப்பாசம், சினம் என்ற குற்றங்களை நீக்கி எளிதில் இறைவனை பற்றுவதற்கு காயத்தால் சிவபூசை செய்தும், மனத்தால் திருவைந்தெழுத்தை ஓதியும், வாக்கினால் திருமுறைகளைக் கொண்டு துதித்தும் வழிபடுவதே நல்வாயிலாகும் என்று நமது ஆதி பரமாசாரியார் அருளுகின்றார். வள்ளுவர் வாக்கும் "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்று காட்டுகிறது. இதில் முதல் நிலை திருத்தல வழிபாடு, திருமுறை ஓதுதல் ஆகியவை, அதன் பயனாக சரியை,கிரியை,யோகமாகிய தவமும் தவத்தின் பயனாக சற்குருவின் தரிசனம் கிடைக்கும். குருவின் வாயிலாக மந்திர உபதேசமும், சிவஞானமும், சிவபூசையும் வாய்க்கும். இதனானே வீடாகிய முத்தியும், பேறாகிய சித்தியும் பெறற்குரியவாம் என்பதனை,

> **தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்**
> **முல்லைவனம் கூடல் முதுகுன்றம் - நெல்லை களர்**
> **காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி**
> **வாஞ்சியமென் முத்தி வரும்.**

என்று நமது ஆதி பரமாசாரியாரும்,

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று வழியடியாரும் அருளியுள்ளார்கள். திருமுறையில் தொடங்கினால் திருவடியில் சேரலாம்' என்பதை இதனால் உய்த்துணரலாம்.

திரு - நிலைத்த செல்வம், முறை - திருவை அடையச்செய்யும் நூல்; திருமுறை என்பதாகும். வீடடைதல் நூற்பயனே என்பதும் இலக்கண விதி. திரு என்பது சிவமே ஆம் என்பதை "சிவமே பெருந்திரு எய்திற்றிலேன்" என்று திருவாசகம் காட்டும். "திருநின்ற செம்மையே செம்மை" என்று ஆரூரர் காட்டுகின்றார். திரு என்ற சொல்லிற்கு உண்மை, அறிவு, ஆனந்தம் என்ற மூன்று பொருளும் உண்டு. இதனை சத்து, சித்து, ஆனந்தம் என்று நான்மறை முடிபும் காட்டுகிறது. இதனை உணர்த்தும் திருவுருவே சோமாஸ்கந்த வடிவாகும். திருபுவனத்தில் அமைந்த மூலவர் விமானத்திற்கும் 'சச்சிதானந்த விமானம்' என்று கல்வெட்டுச் சான்று காட்டுகின்றது. உண்மை - இயல், வாய்மை - இசை, மெய்மை - மெய்ப்பாடு என்று மும்மைத் தமிழும் இவ்வகையாகவே அமைந்துள்ளது. "முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்" என்று அப்பரும், "முத்தமிழ் நான்மறை ஓம்பு தன்மையன்" என்று சம்பந்தரும் , "சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்" என்று திருமூலரும் அருளியுள்ளனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருணைக்கலம்பகத்தில், "நான்மறைச் செம்பொருள் வாய்மை வைத்த சீர்திருத்தேவாரமும் திருவாசகமும்" என்று நமது ஆதீன 'நாவலர்' எல்லப்பர் கூறுகின்றார்.

முத்தமிழும் சங்க காலத்தில் உலகியல் அகப்புறத்தை அறைந்தன. அதன்பின் அறம் உரைத்தன. சமயாசாரியார் காலத்தில் தான் உண்மைப் பொருளை ஓதும் தகையன ஆகியது என்பதை சேக்கிழார், "தமிழ்செய் தவம் நிரம்ப முத்தமிழ்விரகர் சம்பந்தர் திருஅவதாரம் செய்தார்" என்று காட்டுகின்றார். ஆகையினால் பக்தி இலக்கியக் காலமே தமிழின் பொற்காலமாகும். பன்னிரு திருமுறைகளில் பதினொன்றாம் திருமுறை இயற்றமிழாகிய பிரபந்த வகையாகவும், மூவர் தமிழும், இசைப்பாவும் இசைத்தமிழ் வகையாகவும், தொண்டர்ப் புராணம் நாடகத்தமிழாகவும், கோவைத்திருவாசகமும் அருளியல் அகப்புறத்து வகையன, திருமூலர் சொல் சாத்திரமாகவும் அமைந்துள்ளது பெரும் சிறப்பாகும். இவற்றை நீதி நூல்களும் எழுத்தறிவிக்கும் பொழுதே ஓதி உணர்ந்திட வேண்டுமென்று காட்டுகின்றன. "தேவர் குறளும் திருநான் மறை முடிவும் மூவர் தமிழும் முனிமொழியும் கோவை திருவாசகமும், திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்றுணர்" என்று நல்வழி நூலும், "வில்வம் அறுகுக்கு ஒவ்வா மென்மலர்கள் நால்வர் என்னும் நல்அன்பர் சொற்கொவா நான்மறைகள்" என்று நீதி வெண்பாவும் கூறுகிறது.

திருமுறை என்ற சொல்வழக்கம் பன்னெடுங்காலமாக பயிலப்பட்டு வருகிறது. "சாற்று மெய்ப்பொருள் தரும் திருமுறையினை" என்று சம்பந்தர் புராணத்திலும், "திருமுறை எழுதுவோர் வாசிப்போர்" என்று காழிக்கணநாதர் புராணத்திலும் சேக்கிழார் காட்டுகின்றார். கருவூர்தேவர் திருவிசைப்பாவில் "பந்தமும் பிரிவும் தெரிபொருட்பனுவல் படிவழி சென்று சென்றேறிச் சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி" மும்மலங்களை நீக்கவும் வீடுபேறு அடைவதற்குரிய முறையினை தெரிக்கின்ற பாடல்கள் இவை என்கிறார். இதுபோல் "காமம் சான்ற கடைக்கோட் பனுவல்" என்று கோவையாரை குமரகுருபர முனிவரும் காட்டியுள்ளார். "பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள் சூடுமின் சென்னி வாய் தோத்திரம் சொல்லுமே" என்று திருமூலர், குருவாக எழுந்தருளுகின்ற திருவருட்சக்தியே திருமுறையாகும் என்கிறார். இவ்வாறே "குருவின் திருவுருக் கொண்டு ஆறாத இன்ப சுகாதீதம் நல்கினள் அம்பிகையே" என்று புவனாம்பிகை சதகம் சாற்றுகிறது. ஞானசம்பந்தர் ".அரத்துறை அடிகள் தம் அருளை முறைமையாக சொன்ன பாடல்" என்றும், "தமிழ் மாலை பாடுவித்து என் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை" என்று அப்பரடிகளும் அருளியுள்ளனர்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவ்வழியே நமது ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் "திருமுறைகளோ தாய்" என்று காட்டியுள்ளார். ஞானசம்பந்தர் அருள் வரலாற்றிலும், பெருமான் ஆணையிட பெருமாட்டி "திருமுலைப்பால் சுரந்தளித்து" திருமுறை பாடுவித்த அருளிபாட்டை காணலாம். "சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்கிறது திருவருட்பயன்.

தருமை ஆதீனம் 4ஆவது குருமகாசந்நிதானம், அடியார்கள் தங்களுடைய திருவடியில் அர்ச்சித்த மலர்களை திருமுறை ஏட்டின் மீது தரிசிக்கக் காட்டி திருமுறையும் குருவடிவமும் ஒன்றே என்று நிரூபணம் செய்திருக்கின்றார்கள். "ஐந்து பேர் அறிவும்" என்ற பன்னிரண்டாம் திருமுறைப் பாடலின் அனுபவப்பொருளைக் கேட்டு குமரகுருபரரை தடுத்து ஆட்கொண்டவர்கள்.

பெருமான் மறைத்திறத்தை ஆன்மாக்களின் தகுதிக்கேற்ப உள்நின்று உணர்த்தியும், வேதாகமமாக உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும், பராவு சிவராக எழுந்தருளிய சமயாசாரியார் வாக்கினால் திருமுறைகளாக திருவாய் மலர்ந்து அருளியுள்ளான். இவை அனைத்தும் பதிஞானமாகும், பரபோகத்தை உய்க்கச் செய்யவல்லது. இவற்றை 'பரமாப்த வாக்கியம்' என்று மரபுணர்ந்தோர் போற்றுவர். இவற்றின் புடை, சார்பு நூல்களே மற்றவை என்பதால் தருமை ஆதீனம் 26ஆவது குருமணிகள் வேதம் முதலாக ஆகம, புராண, இதிகாச, திருமுறைத்தோத்திர, சித்தாந்தச்சாத்திர, பண்டாரச்சாத்திரம் ஈறாக அனைத்தையும் மரபு மாறாமல் பாதுகாத்திட வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டருளினார்கள்.

இம்மரபு உணராத ஆன்மானந்தவாதியை நிராகரிப்பதற்கு நமது ஆதீ பரமாசாரியார் 'முத்தி நிச்சயம்' நூலில்,

சந்தான நற்குரவர் தக்கோர் பிறர் சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர் - முந்தவே
எந்த முத்தி சித்தாந்தம் என்றார்கள் சைவத்தில்
அந்த முத்தி நிச்சயிப்போம் யாம்

என்று தாபித்து அருளுகின்றார். இதற்கு முத்தி நிச்சயப் பேருரையில் (முதல் திராவிட மாபாடியம்) வெள்ளியம்பலவாண முனிவர் விரிவாக விளக்கம் கண்டுள்ளார் ஆண்டு காண்க.

"கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்" என்று உமாபதி சிவம் காட்டி, பின்னும் முதல் ஏழு திருமுறைகளை வேதத்தின் சாரமான சப்தகோடி மகாமந்திரங்களாகவும், பதினொரு திருமுறைகளை சிவாகமத்தின் முடிவான பஞ்சபிரம்ம சடங்க மந்திர ரூபமாகவும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

'தோடுடைய செவியன்' முதல் 'உலகெலாம்' ஈறாக வகுக்கப்பட்ட பன்னிரு திருமுறைகளை பிரணவ சொரூபமாகவும் விளங்குவதாக,

மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
இந்த வகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்றாக்கினார்.

மன்னுதமிழ் விரகரெங்கள் காழிவேந்தர் வகுத்தருளால்
அமைத்த திருமுறை ஓர் மூன்றும்
அன்னவகை வாகீசர்முரை ஓர் மூன்றும்
ஆரூரர் உரைத்த திருமுறைய தொன்றும்
துன்னவகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்
தூய மனு எழுகோடி என்பதுன்னி
தன்னிகரில் திருவருளால் மன்னன் தானும்
தாரணியோர் வீடு பெறுந்தன்மை ஆழ்ந்தே.

என்று எடுத்துக்காட்டுகின்றார்.

சிவாகமம் காட்டுகின்றவாறு திருவாசக நூலில் சிவபுராணம் முதற்பகுதியில் வாழ்க ஆறும், வெல்க ஐந்தும், போற்றி எட்டும் என்ற எண்ணிக்கையில் சடங்க, பஞ்ச பிரம்ம, அட்டபுஷ்ப அர்ச்சனை மந்திரமாக அமைந்துள்ள நயத்தைக் காணலாம். திருவாசகப் பாடல் தொகையும் 658 ஆகவே அமைந்துள்ளது.

கபில தேவர் பதினொன்றாம் திருமுறையில், "நூறான் பயன் ஆட்டி நூறு மலர் சொரிந்து நூறா நொடிவதனின் மிக்கதே நூறா உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளேறுடையானைப் பாடலால் ஒன்று" என்று திருமுறை ஓத வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றார்.

திருமுறைகள் நமக்கு இகபரசுகத்தை அளிப்பவை என்பதனை, "இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம் அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே" என்று சுந்தரர் அருளியுள்ளார். திருப்பதிகங்கள்தோறும் திருக்கடைக்காப்பில் பாராயணப் பயன் கூறுவதை திருஞானசம்பந்தர் கைக்கொண்டுள்ளார். அதில் பிணி, நோய், பாவம், பழி, இடர், துயர், கவலை, துன்பம், தீவினை, நல்வினை, தொல்வினை, துரிசு, குற்றம், செற்றம் அனைத்தும் நீங்கும், இதற்கு மறுதலையாக மருந்து, மந்திரம், புண்ணியம், இன்பம், நல்வினை, நலம், வீடு, பேறு, பரிசு, இம்மை, மறுமை, செல்வம் வேண்டியவை அனைத்தும் பெறலாம் என்று காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக "உரை நலமலி ஒருபதும் நவில்பவர் நிகழ்குல நிலநிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள் புகழ்புவி வளர்வழி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடிமையின் மிகைபுணர் தரநல மிகுவரே", "தானுறு கோளுநாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய் ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே" என்று பாடியதை காணலாம்.

அருமறையைச் சிச்சிலிபண்டருந்தத்தேடும்
அதுபோல என்றும் உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப்
பலரில்லை என்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாது ஆற்றெதிரேயோடும்
என்புக்கும் உயர்கொடுக்கும் இடுநஞ்சாற்றும்
கரியை வளைவிக்கும் கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையில் உறக்காற்றும் காணே.

என்று திருமுறைப் பெருமையினை உமாபதி சிவமும் எடுத்துரைக்கின்றார்.

தருமையாதீனத்தில் தான் திருமுறைகள் ஓலைச்சுவடிகளிலும், செப்பேடுகளிலும், கையெழுத்து பிரதியாகவும், பழைய அச்சு இயந்திர பதிப்பாகவும், நவீன கணினியில் செய்த பதிப்பாகவும், மின்னம்பல இணையதள பக்கமாகவும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இன்றைய தலைமுறையினர் பயன்படுத்துவதற்குரிய முறையில் கைபேசிச் செயலியாகவும், கைபேசியில் மிகவும் குறைந்த இடத்தை மட்டுமே எடுத்துக் கொண்டு, ஒருமுறை பதிவிறக்கம் செய்தபின், பிறகு இணையதள வசதி இல்லாமலேயே பயில்கின்ற வகையில் வெளியிட்டு இருக்கின்றோம்.

ஆதீனத்தில் பழைய கல்வெட்டுச் செய்திகளுக்கு ஏற்ப இன்றும் பதிகமாக ஓதுகின்ற வழக்கம் இருக்கின்றது. அபிஷேக நேரத்திலே முழு பதிகத்தையும் பண்ணோடு பாடுகின்ற மரபு கைக்கொள்ளப் படுகின்றது. இதுபோலவே ஆதீனத் திருக்கோயில்களில் பழமை மாறாமல் திருவீதிகளில் திருமுறைப் பாராயணம் செய்கின்ற பணி மேற்கொள்ளப்படுகின்றது. எங்கும் இலாத வகையில் தருமை ஆதீனத்திலே தான் திருமுறைப் பாடுகின்ற ஓதுவார்களுக்கு இண்டை சாற்றுதல் என்ற முறைமை செய்யப்பட்டு, அதன் பின்னரே அவர்கள் அங்கே ஓதுவதற்கு அனுமதிக்கப்படுவது சம்பிரதாயமாக உள்ளது.

திருமுறை பாராயணம் செய்வது ஒவ்வொரு சைவ சமயத்தாரின் நித்திய கடமையாகும். நாமும் துறவறம் மேற்கொள்வதற்கு வழி அமைத்தது "எத்தாயர் எத்தந்தை" என்ற தேவாரக் குறிப்பிருந்த தாளாகும். துறவறம் ஏற்றது முதல் நாள்தோறும் ஐந்து திருப்பதிகங்களை ஓதி வருகின்றோம். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நன்நோக்கத்தினால் சீர்காழி குடமுழுக்கு விழாவை முன்னிட்டு 'ஒரு கோடி முறை' திருவெழுகூற்றிருக்கை பதிகத்தினை பாராயணம் செய்ய பணித்தோம், அதற்கு இசைய உலகத்தில் உள்ள அனைத்துத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தரப்பினரும் திருப்பதிகப் பாராயணம் செய்தனர். அதன் பயனாக சீர்காழியில் நமது ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில் வளாகத்தில் *16.04.2023* அன்று வரலாற்றில் முதல் முறையாக தேவாரம் எழுதியச் செப்பு பட்டயங்கள் பெருவாரியாக நல்ல நிலையில் கிடைத்துள்ளன என்பதை எண்ணினால் பாராயணத்திற்கும் பலன் உண்டு என்பதற்கு இந்நிகழ்வு சான்றாக அமைந்துள்ளது.

திருமுறைகளை பாராயணம் செய்கின்றவர்கள் வசதிக்கு ஏற்ப பன்னிரு திருமுறை *18,251* பாடல்களையும் ஒரே புத்தகமாக சீர்காழியில் வெளியிட்டோம். அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க செல்லுமிடமெல்லாம் எடுத்துச் சென்று பாராயணம் செய்யும் வண்ணம் தற்பொழுது ஒரே நூலை எட்டு பிரிவுகளாகப் பிரித்து திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பு முழுவதும் ஒரு நூல், திருநாவுக்கரசர் தேவாரம் முழுவதும் ஒரு நூல், சுந்தரர் திருப்பாட்டு முழுவதும் ஒரு நூல், மாணிக்கவாசகர் திருவாசகமும், திருக்கோவையாரும் ஒரு நூல், திருவிசைப்பா திருப்பல்லாண்டு முழுவதும் ஒரு நூல், திருமூலர் அருளிய திருமந்திரமாலை முழுவதும் ஒரு நூல், பதினொன்றாம் திருமுறை நாற்பது பிரபந்தங்களும் ஒரு நூல், சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் முழுவதும் ஒரு நூல் என்று 3202 பக்கங்கள் கொண்ட தொகுப்பினை திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ கம்பஹரேஸ்வர சுவாமி, ஸ்ரீ சரபேஸ்வரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகப் பெருவிழாவில் வெளியிடுகின்றோம். இந்த எட்டு நூல் தொகுதிகளை தருமை ஆதீன ஒளிப்பதிவகத்தில் வடிவமைத்து, தருமையாதீன ஞானசம்பந்த பதிப்பகத்தால் அச்சிட்டு வெளியிடுவதற்கு ஆகும் பெரும்பொருட் செலவினை சென்னை *AUTOTECH INDUSTRIES i PRIVATE LIMITED*, நிறுவனத்தார், தொழிலதிபர் 'திருப்பணிச்செம்மல்' திரு.கே.எஸ். ஜெயராமன், திருமதி.பிருந்தா ஜெயராமன், அவர்கள் குடும்பத்தார் எற்றுப் போற்றியுள்ளார்கள். அவர்கள் தருமை ஆதீனத்தின் திருக்கோயில் புனரமைப்புத் திருப்பணிகளில் தொடர்ந்து பங்குகொண்டு வருகிறார்கள். ஆதீன நிகழ்வுகளில் இடைவிடாது கலந்துகொண்டு சிறப்பித்தும் வருகின்றார்கள். அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் எல்லா நலன்களும் வளங்களும் பெருக ஆசிர்வதிக்கின்றோம். மெய்யன்பர்கள் இந்த தொகுப்பினை வாங்கி பயன்பெறும் வகையில் மிக குறைந்த விலையில் கொடுக்கப்படுகின்றது. அன்பர்கள் வாங்கி பாராயணம் செய்யவும். திருமுறைகளை இடையறாது நாளும் ஓதுகின்ற அனைவருக்கும் குறைவிலாத பெருவாழ்வு பெற்று உய்ய செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவடிகளை சிந்திக்கின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

தருமை ஆதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

- ஸ்ரீ சம்பந்தசரணாலயர்.

ஞானக்குழந்தை:

தமிழகத்தில் - தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லி புத்தூரில் கார்காத்த வேளாளர் மரபில் சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்ற நல்லறப் பெரியோர்கட்கு அருந்தவ மகவாகப் பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்தவர், தருமை ஆதீன முதற் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவருக்குப் பெற்றோர்கள். திருஞான சம்பந்தரைப் போல் தமது குழந்தையும் சிவஞானம் பெற்றுச் சைவம் வளர்க்கும் ஞானாசிரியனாகத் திகழ வேண்டும் என்று எண்ணி ஞானசம்பந்தன் என்ற நற்பெயரைச் சூட்டி வளர்த்து வருகையில், தமது குலதெய்வமாகிய சொக்கநாதரையும் மீனாட்சியம்மையையும் தரிசிப்பதற்கு ஞான சம்பந்தருடன் மதுரை சென்று பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி வழிபட்டனர். பெற்றோர்கள் ஊருக்குப் புறப்படுங்கால் ஞானசம்பந்தர் தன்னைத் தொடர்ந்து நின்ற தாயும் தந்தையுமாகிய சொக்கநாதரைப் பிரிய மனமின்றி, உடலுக்குத் தாய் தந்தையர்களாகிய பெற்றோர்களுக்கு விடை கொடுத்தனுப்பிச் சொக்கநாதர் வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டவரானார்.

கண்ணுக்கினிய பொருள்:

நாள்தோறும் பொற்றாமரைக் கரையில் அடியார்கள் சிவபூசை புரிவதைக் கண்டார் ஞானசம்பந்தர், தாமும் அவ்வாறு சிவபூசை புரிய எண்ணினார். சொக்கநாதரை வேண்டினார். கருத்தறிந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முடிக்கும் கண்ணுதற் கடவுளும் அன்றிரவு அவர் கனவில் தோன்றி. நாம் பொற்றாமரைத் தடாகத்தின் ஈசான்ய பாகத்தில் கங்கைக்குள் இருக்கிறோம். நம்மை எடுத்துப் பூசிப்பாயாக' என அருளினார். அவ்வண்ணமே மறுநாள். காலையில் பெருமானின் கருணையை வியந்து போற்றிப் பொற்றாமரைத் தடாகத்தல் மூழ்கினார். ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் கண்ணுக்கினிய பொருளாகத் தமது கரத்தில் வரப்பெற்றார். ஆசாரியன் மூலமாகத் தீக்ஷை பெற்றுத்தானே சிவபூசை புரிதல் வேண்டும்; ஆசாரியன் வேண்டுமே: சிவஞான உபதேசம் பெறவேண்டுமே; எப்படிப் பூசையைப் புரிவேன்! என்ற எண்ணம் தோன்றவே. அது பற்றி இறைவனிடமே முறையிட்டார்.

ஞானாசாரியனை அடைதல்:

வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதுந் தருவோனாகிய சொக்கநாதப் பெருமான் மறுநாள் கனவில் எழுந்தருளி திருக்கயிலாய பரம்பரை - திருநந்தி மரபு மெய்கண்ட சந்தான வழியில் திருவாரூரில் விளங்கும் கமலை ஞானப்பிரகாசர் என்ற ஆசாரியரிடத்தில், வருகிற சோம வாரத்தில் ஞானோப தேசம் பெற்று நம்மைப் பூசிப்பாயாக' என அருளினார். அன்றிரவே கமலை ஞானப்பிரகாசர் கனவிலும் எழுந்தருளி, ஞானசம்பந்தன் வருகிற சோமவாரத் தன்று வருவான்; அவனுக்கு ஞானோபதேசம் செய்து சிவபூசையும் எழுந்தருளுவிப்பாயாக' என்று அருளினான். ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சென்று. பூங்கோயிலில் உள்ள சித்தீச்சரம் தக்ஷிணா மூர்த்தி சந்நிதியில் அமர்ந்திருந்த கமலை ஞானப்பிரகாசரைக் கண்டார். காந்தம் கண்ட இரும்புபோல ஆசாரியரால் ஈர்க்கப்பட்டார். சமய விசேட நிர்வாண தீக்ஷைகளால் பாச ஞானம் பசுஞானங்கள் நீங்கிப் பதிஞானம் கைவரப் பெற்றார். சொக்கநாதப் பெருமானை ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாகப் பூசிக்கப்பெரும் பேற்றையும், ஞான அநுபூதியையும் அடைந்தார். கைவிளக்குப் பணிவிடை: பன்னாளும் ஆசாரியப் பணிவிடை செய்து தங்கி இருக்கும் நாள்களில் ஒருநாள் தியாகராசப் பெருமானின் அர்த்தயாம பூசையைத் தரிசித்து ஆசாரியர் தமது மாளிகைக்கு எழுந்தருளினார். அப்பொழுது கைவிளக்குப் பணியாளன் உறங்கிவிட ஞானசம்பந்தர் தமக்கு ஞான ஒளியேற்றி நல்வழிகாட்டிய ஞானாசாரியருக்கு ஒளிவிளக்கு ஏந்தி முன்சென்றார். திருமாளிகையின் வாயில் முன்னர்ச் சென்றவுடன்.

சிவாநுபூதியிலேயே திளைத்திருந்த ஞானப்பிரகாசர். அருள்நிலை கைவரும் பக்குவத்திலிருந்த ஞானசம்பந்தரை 'நிற்க' எனக் கட்டளையிட்டு உட்சென்றார். ஆசாரியர் பெற்ற

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவாநுபூதியை ஞான சம்பந்தரும் கைவரப் பெற்றவராய் மாளிகை வாயிலில் கைவிளக்கு ஏந்தியவராகவே நின்றார். ஞானசம்பந்தரின் பெருமையை குலம் அறியச்செய்து அதன்மூலம் சைவப் பயிர் தழைக்க இறைவன் திருவுளம் பற்றினான் போலும். அன்றிரவு பெருமழை பெய்தது. சிவாநுபூதியில் திளைத்திருந்த ஞானசம்பந்தர் மீது ஒருதுளி மழை கூடப்படவில்லை. விளக்கோ அணையாது சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருந்தது.

குருஞானசம்பந்தராயினார்:

வைகறைப் பொழுதில் ஞானப்பிரகாசரின் பத்தினியார் சாணம் தெளிக்க வருங்கால். ஞானசம்பந்தர் அநுபூதி நிலையில் நிற்பதையும். விளக்குச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதையும் கண்டு உட் சென்று பதியிடம் வியப்புடன் அதனை வெளியிட்டார்.

ஞானப்பிரகாசர் விரைந்து வந்து பார்த்து. ஞானசம்பந்தரிடம் திருவருள் பெருகுகின்ற நிலையைக் கண்டு மகிழ்ந்து "ஞானசம்பந்தா! நீ ஆசாரியனாக இருந்து, பக்குவம் உடையர்களுக்கு ஞானோபதேசம் செய்து ஆசாரியனாக விளங்குவாயாக" என்று அருளினார். அப்பொழுது ஞானசம்பந்தர்.

> **"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ**
> **எனக்கும் உடற்கும் எனதிச்சை யோஇணங் கார்புரத்தைச்**
> **சினக்குங் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்**
> **றுனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே",**

என்ற பாடலைப்பாடி "எங்குச்சென்று எவ்வாறு இருப்பேன்" என்று விண்ணப்பிக்க. ஞானப்பிரகாசர். "மாயூரத்தின் ஈசான்ய பாகத்தில் வில்வாரணியமாய் உள்ளதும், திருக்கடவூரில் நிக்கிரகம் பெற்ற எமதருமனுக்கு அனுக்கிரகம் செய்ததும் ஆன தருமபுரத்தில் இருந்து கொண்டு, அன்பு மிக உண்டாய். அதிலே விவேகமுண்டாய், துன்ப வினையைத் துடைப்ப துண்டாய். இன்பம் தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஒடி வருங்காரணர்க்கு உண்மையை உபதேசித்துக் குருவாக விளங்குவாயாக" என்று கட்டளையிட்டருளினார். ஞானசம்பந்தர், "குருஞானசம்பந்தர்" ஆயினார்.

தருமபுரத்தில் ஆதீனம் கண்டார்:

ஆசிரியர் ஆணையை மறுத்தற்கு அஞ்சியவராய்க் கன்றைப் பிரிந்த பசுப்போல வருந்தும் குருஞான சம்பந்தரை நோக்கிக் "குருவாரந்தோறும் வந்து நம்மைத் தரிசிப்பாய்" என்று தேறுதல் கூறினார் ஞானப்பிரகாசர்.

குருஞானசம்பந்தர் தம் குரு ஆணையைச் சிரமேற்கொண்டு தமது ஆன்மார்த்த மூர்த்தியுடன் தருமபுரத்திற்கு எழுந்தருளி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தருமபுர ஆதீன மடாலயத்தை நிறுவியருளினார். ஞானாநு பூதியில் திளைத்துப் பல பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞானோபதேசம் செய்து அநுபூதிச் செல்வராய்த் திகழ்ந்தார். அவர் அநுபூதியில் பொங்கித் ததும்பிப் பூரணமாய் எழுந்த சிவஞானப் பேரருவியே சிவபோக சாரம், சொக்க நாத வெண்பா, முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாத ஷட்கம். சொக்கநாதக் கலித்துறை. ஞானப் பிரகாசமாலை, நவமணி மாலை ஆகிய எட்டு நூல்கள் ஆகும். பாடல்கள் எளிமையும்.

இனிமையும் பயப்பனவாய். பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண் மையைத் தெளிய விளக்குவனவாய் உள்ளன.

ஆனந்த பரவசருக்கு உபதேசம்:

குருஞானசம்பந்தர் தம்மை அடைந்த பக்குவமுடையவர் களுக்கு உபதேசித்து அநுபூதிமானாக விளங்கும்போது. உபதேச பரம்பரையை வளர்த்துவர அதி தீவிர பக்குவ நிலையிலிருந்த ஆனந்த பரவசருக்கு உபதேசித்துத் தாம் ஜீவசமாதி கூடியருளினார்கள். அதிதீவிர நிலையில்

இருந்த ஆனந்தபரவசர் தமது குருநாதர் உபதேசித்த ஞானநிலை விரைவில் கூடியவராய். தம் ஞானாசாரியர் ஜீவசமாதி கூடிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலய விமான ஸ்தூபியைத் தரிசித்தவாறு நிட்டை நிலை கூடினார்கள்.

மீண்டும் எழுந்தருளினார்:

அதுகண்ட ஏனைய சீடர்கள் குருமரபு விளங்க வேண்டுவதை ஆசாரியர் திருமுன் சென்று விண்ணப்பிக்க. பரமாசாரிய மூர்த்திகள் ஜீவசமாதியினின்றும் எழுந்து வந்து ஸ்ரீ சச்சிதானந்த தேசிகருக்கு உபதேசம் செய்து அநுபூதிநிலை வருவித்து ஞானபீடத்து இருத்தி வைகாசி மாதம் கிருஷ்ணபக்ஷ சப்தமி திதியில் தாம் முன்போல் ஜீவ சமாதியில் எழுந்தருளினார்கள்.

தருமை ஆதீனப் பணி:

கி.பி.16ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞான சம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்ற இத்திருத்தருமை ஆதீனம் அதுமுதல் வழி வழியாக விளங்கி, மொழித் தொண்டும், சமயத் தொண்டும். சமூகத் தொண்டும். ஒல்லும் வகையெல்லாம் ஆற்றி வருகிறது. இப்பொழுது ஞானபீடத்தில், திருமுறை கண்டெடுத்த 27ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளியிருந்து திருப்பணி களை பல இயற்றி பொற்கால அருளாட்சி புரிந்து வருகிறார்கள்.

வாழ்க தருமை ஆதீனம்! வளர்க குருபரம்பரை!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta.

பத்தாம் திருமுறை ஆசிரியர் திருமூலர் அருள்வரலாறு

தென்னாடு வருகை:

திருக்கயிலாயத்திலே சிவபிரானது திருக்கோயிலில் முதற் பெருங் காவல் பூண்டவர் திருநந்திதேவர். அவரது திருவருள் பெற்ற மாணாக்கராகிய சிவயோகியார் ஒருவர். அவர் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் வாய்க்கப் பெற்றவர்; அகத்திய முனிவர்க்கு நண்பர். அம் முனிவருடன் சில நாள் தங்குதற்கு எண்ணிய சிவ யோகியார், பொதியமலையை அடைதற்கு எண்ணித் திருக்கயிலாயத் தினின்றும் புறப்பட்டுத் தென்திசை நோக்கி வந்தார். வரும் வழியில் திருக்கேதாரம், பசுபதிநாதம் (நேபாளம்), அவிமுத்தம் (காசி), விந்தமலை, திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய திருத் தலங்களைப் பணிந்து காஞ்சி நகரையடைந்தார். அங்குத் திருவேகம் பத்தில் எழுந்தருளிய பெருமானை இறைஞ்சிப் போற்றினார். பின்பு பெரும் பற்றப் புலியூரை வந்தடைந்தார். அங்குக் கூத்தப் பெருமானைப் போற்றித் தம் உள்ளத்தே பொங்கியெழுந்த சிவஞானமாகிய மெய் யுணர்வினால் சிவானந்தத் திருக்கூத்தினைக் கண்டுகளித்து ஆராத பெருவேட்கையினால் தில்லைப் பதியில் சிலகாலம் தங்கியிருந்தார்.

சாத்தனூரில்

தில்லைத் திருநடங்கண்டு மகிழ்ந்த சிவயோகியார், திருவாவடு துறையை அணுகித் திருக்கோயிலை வலம் வந்து வழித்துணை மருந்தாகிய மாசிலா மணியீசரை வழிபட்டு மகிழ்ந்தார். அந்நிலையிலே அத் தலத்தை விட்டு நீங்காததொரு கருத்து அவருள்ளத்தே தோன்றியது. அதனால் அத்தலத்திலே தங்கியிருந்தார். ஆவடுதுறையீசர்பால் ஆராத காதலையுடைய சிவயோகியார், அத்தலத்தை அரிதின் நீங்கிச் செல்லத் தொடங்கினார். அவர் செல்லும் வழியிற் காவிரிக் கரையிலுள்ள சோலையிலே மேய்ந்துகொண்டிருந்த பசுக்கள் கதறி யழுவதனை எதிரே கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே ஆநிரை மேய்க்குங் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் என்பான் அவ் விடத்தே தனியே வந்து பசு நிரையை மேய்க்குந் தொழிலில் ஈடு பட்டவன், தான் எடுத்த பிறவிக்குக் காரணமாகிய வினைகள் நுகர்ந்து தீர்ந்தமையால் அவனது வாழ்நாளைக் கூற்றுவன் கவர்ந்துகொள்ள உயிர்நீங்க அங்கு நிலத்தில் வீழ்ந்து இறந்து வெற்றுடலாய்க் கிடந்தான். அவனது உயிர்பிரியவே அவனால் அன்புடன் மேய்க்கப்பெற்ற பசுக்கள் அவனது உடம்பினைச் சுற்றி நெருங்கிநின்று மோப்பனவும் கதறுவனவுமாகி வருந்தின.

திருமூலராதல்:

ஆக்களின் பெருந்துயரத்தைச் சிவயோகியார் கண்டார். அருளாளராகிய அவருள்ளத்திலே 'பசுக்கள் உற்ற துயரத்தை நீக்குதல் வேண்டும்' என்னும் எண்ணம் இறைவன் திருவருளால் தோன்றியது,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

'இந்த ஆயன் உயிர் பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்கா'' எனத் தெளிந்த சிவயோகியார், தம்முடைய உடம்பினைப் பாதுகாப்புடைய ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டுத் தாம் பயின்றுணர்ந்த பரகாயப் பிரவேசம் (கூடுவிட்டுக் கூடுபாய்தல்) என்னும் பவன வழியினாலே தமது உயிரை ஆயனாகிய மூலனது உடம்பிற் புகும்படி செலுத்தித் திருமூலர் என்னும் பெயருடையராய் எழுந்தார். அவர் ஆயனுடம்புடன் எழுதலும், சுற்றி நின்ற பசுக்கள் யாவும் தம் துயரம் நீங்கி அன்பின் மிகுதியால் அவரது உடம்பினை நாத்தழும்ப நக்கிமோந்து கனைத்து மிகுந்த களிப்புடன் துள்ளியோடித் தாம் விரும்பிய இடங்களிற் சென்று புல்லை மேய்ந்தன. திருமூலர் அப்பசுக்களைக் இளைப்பாறச் செய்து பாதுகாத்தருளினார்.

ஊரவர் உண்மை உணர்தல்:

மாலைப் பொழுது வந்தது. பசுக்கள் தத்தம் கன்றுகளை நினைந்து தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைந்தன. அவை செல்லும் வழியிலே தொடர்ந்து பின் சென்ற திருமூலர், பசுக்கள் தத்தமக்குரிய வீடுகளிற் சென்று சேர்ந்த பின்னர் அவ்வூர் வழியில் தனித்து நின்றார். அப்பொழுது ஆயனாகிய மூலனுடைய மனைவி ''என் கணவர் பொழுது சென்றும் வரவில்லையே, அவர்க்கு என்ன நேர்ந்ததோ'' என்று அஞ்சியவளாய்த் தன் கணவனைத் தேடிக் கொண்டு வழியெதிரே செல்பவள் திருமூலராகிய சிவயோகியார் நின்ற இடத்தை அடைந்தாள். தன் கணவனது உடம்பிற்றோன்றிய உணர்வு மாற்றத்தைக் கண்டாள். 'இவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்திருத்தல் வேண்டும்' என எண்ணினாள்; அவரைத் தளர்ச்சியின்றித் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் கருத்துடன் அவருடம்பைத் தொடு தற்கு நெருங்கினாள். அதுகண்ட திருமூலராகிய சிவயோகியார் அவர் தம்மைத் தீண்டாதபடி தடுத்து நிறுத்தினார். நெருங்கிய சுற்றத்தார் எவருமின்றித் தனியளாகிய அவள் திருமூலரது தொடர்பற்ற தனி நிலையைக் கண்டு அஞ்சிக் கலக்கமுற்றாள். ''நும்பால் அன்புடைய மனைவியாகிய எளியேனை வெறுத்து நீங்குதலாகிய இதனால் எனக்குப் பெருந்துன்பத்தைச் செய்துவிட்டீர்'' என்று புலம்பி வாட்ட முற்றாள். நிறைதவச் செல்வராகிய திருமூலர் அவளைப்பார்த்து, ''நீ எண்ணியபடி உனக்கு என்னுடன் எத்தகைய உறவும் இல்லை' என்று சொல்லிவிட்டு அவ்வூரிலுள்ள பொது மடத்திற் புகுந்து சிவ யோகத்தில் அமர்ந்திருந்தார்.

தன் கணவனது தன்மை வேறுபட்டதனைக் கண்ணுற்ற மூலன் மனைவி, அது பற்றி யாரிடமும் சொல்லாமலும் தவநிலையினராகிய அவர்பால் அணையாமலும் அன்றிரவு முழுதும் உறங்காதவளாய்த் துயருற்றாள். பொழுது விடிந்தபின் அவ்வூரிலுள்ள நல்லோரை யடைந்து தன் கணவனது நிலைமையை எடுத்துரைத்தாள். அதனைக் கேட்ட பெரியோர்கள் திருமூலரை அணுகி அவரது நிலையை நாடி உற்று நோக்கினார்கள். 'இது பித்தினால் விளைந்த மயக்கம் அன்று;

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சித்த விகாரக் கலக்கங்களை யெல்லாம் அறவே களைந்து தெளிவுபெற்ற நிலையில் சிவயோகத்தில் அழுந்திய கருத்தினராய் இவர் அமர்ந்திருக்கின்றார். இந்நிலைமை யாவராலும் அளந்தறிதற்கு அரியதாகும்' எனத் தெளிந்தார்கள். 'இவர் இருவகைப் பற்றுக்களையும் அறுத்து ஞானோபதேசத்தால் பரமர் திருவடியைப் பெற்ற சீவன் முத்தர்களைப் போன்று எல்லாவற்றையும் ஒருங்கே அறியவல்ல முற்றுணர்வுடைய முனிவராக விளங்குகின்றார். எனவே முன்னை நிலைமைப்படி உங்கள் சுற்றத் தொடர்பாகிய குடும்ப வாழ்க்கையில் ஈடுபடமாட்டார்' என மூலனுடைய மனைவிக்கு எடுத்துரைத்தார்கள். அதுகேட்டு அவள் அளவிலாத் துயரத்தால் மயக்கமுற்றாள். அருகேயுள்ளவர்கள் அவளுக்குத் தேறுதல்கூறி வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

திருவாவடுதுறையில் சிவயோகம்:

சாத்தனூர்ப் பொதுமடத்தில் சிவயோகத்தில் அமர்ந்திருந்த திருமூலர். யோகுகலைந்து எழுந்து முதல்நாளில் பசுக்கள் வந்த வழியினையே நோக்கிச் சென்று தமது உடம்பினை மறைத்து வைத்த இடத்தை அடைந்து தம் உடம்பைத் தேடிப்பார்த்தார். வைத்த இடத்தில் அவ்வுடம்பு காணப்படவில்லை. அது மறைந்து போன செயலை மெய்யுணர்வுடைய சிந்தையில் ஆராய்ந்து தெளிந்தார்.

சிவபெருமான் உயிர்கள் பால்வைத்த பெருங்கருணை யினாலே அருளிச் செய்த சிவாகமங்களின் அரும் பொருள்களை இந் நிலவுலகில் திருமூலரது வாக்கினால் தமிழிலே வகுத்துரைக்கக் கருதிய திருவருட்டிறத்தால் சிவயோகியாரது முன்னைய உடம்பினை இறைவர் மறைப்பித்தருளினார்' என்ற உண்மையினைத் திருமூலர் தமது முற்றுணர்வினால் தெளிய வுணர்ந்தார். சாத்தனூரிலிருந்து திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்தார்; அங்கு எழுந்தருளிய அம்மையப்பரை வணங்கி அத் திருக்கோயிலின் மேற்றிசையிலுள்ள அரசமரத்தின் கீழ்த் தேவாசனத்தில் சிவயோகத்தில் அமர்ந்து, நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்தருளும் செம்பொருளாம் சிவபரம் பொருளுடன் உணர்வினால் ஒன்றியிருந்தார்.

திருமந்திரம் அருளிச் செய்தல்

ஒன்றவன் தானே,என்னும் திருப்பாடலைத் தொடங்கி, ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத் தமர்ந்திருந்து மூவாயிரம் திருப் பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறு தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரமாலையை நிறைவு செய்தருளிய திருமூலநாயனார் சிவபெருமானது திருவருளாலே திருக்கயிலையையடைந்து இறைவன் திருவடி நீழலில் என்றும் பிரியாதுறையும் பேரின்ப வாழ்வினைப் பெற்று இனி திருந்தார். திருமூலர் அருளிய திருமந்திர மாலை 'நலஞ் சிறந்த ஞான யோகக் கிரியா சரியையெலாம் மலர்ந்த மொழிமாலையாகத் திகழ்கின்றது'

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ சரபேசுவர சுவாமி

தருமை ஆதீனம்

ஸ்ரீ கம்பகரேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம்

திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சாவூர் மாவட்டம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
குருபாதம்

பன்னிரு திருமுறைப் பதிப்பு
திருப்பணி நன்கொடை

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம்

திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த

ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின் வண்ணம்

திருக்கயிலாயப் பரம்பரை தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

திருபுவனம் அறம்வளர்த்த நாயகி சமேத

ஸ்ரீ கம்பஹரேஸ்வர சுவாமி திருக்கோயில்

ஸ்ரீ சரபேஸ்வர சுவாமி திருக்கோயில்

மகாகும்பாபிஷேக விழாவில்

பன்னிரு திருமுறைகள் எட்டு நூல் பிரிவுகள் 3202 பக்கங்கள் கொண்ட
தொகுப்பினை வெளியிடுவதற்கு ஆகும் பெரும் பொருட்செலவினை

"திருப்பணிச்செம்மல்"

தொழிலதிபர் **திரு.கே.எஸ்.ஜெயராமன்.**

திருமதி.பிருந்தா ஜெயராமன்.

(AUTOTECH INDUSTRIES i PRIVATE LIMITED,Chennai)

அவர்கள் குடும்பத்தார் ஏற்றுப் போற்றியுள்ளார்கள். இவர்கள்,
தருமை ஆதீன தேவஸ்தான திருக்கோயில் புனரமைப்பு திருப்பணிகளில்
தொடர்ந்து பங்குகொண்டு சிவபுண்ணியத்தை செய்து வருவது சிறப்பிற்குரியது.

குறிப்பு

இத்திருமுறை பதிப்பின் விற்பனைத் தொகை மிகக் குறைந்த அடக்க விலையிலே கொடுக்கப்படுகின்றது.
இத்தொகை மீண்டும் இத்திருமுறை தொகுப்பினை தொடர்ந்து வெளியிடுவதற்கு பயன்படுத்தப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

1. பாயிரம் 1

முதல் தந்திரம் 6

1. சிவபரத்துவம் 6
2. வேதச்சிறப்பு 13
3. ஆகமச் சிறப்பு 14
4. உபதேசம் 16
5. யாக்கை நிலையாமை 20
6. செல்வம் நிலையாமை 23
7. இளமை நிலையாமை 24
8. உயிர் நிலையாமை 26
9. கொல்லாமை 27
10. புலால் மறுத்தல் 27
11. பிறன்மனை நயவாமை 28
12. மகளிர் இழிவு 28
13. நல்குரவு 29
14. அக்கினி காரியம் 30
15. அந்தணர் ஒழுக்கம் 31
16. அரசாட்சி முறை 33
17. வானச் சிறப்பு 34
18. தானச் சிறப்பு 35
19. அறஞ்செய்வான் திறம் 35
20. அறஞ்செயான்திறம் 36
21. அன்புடைமை 38
22. அன்பு செய்வாரை அறிவன்சிவன் 39
23. கல்வி 40
24. கேள்வி கேட்டமைதல் 42
25. கல்லாமை 43
26. நடுவு நிலைமை 45
27. கள்ளுண்ணாமை 45

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இரண்டாம் தந்திரம் 47

1. அகத்தியம் 47
2. பதிவலியில் வீரட்டம் எட்டு 47
3. இலிங்க புராணம் 48
4. தக்கன் வேள்வி 49
5. பிரளயம் 50
6. சக்கரப் பேறு 51
7. எலும்பும் கபாலமும் 52
8. அடிமுடி தேடல் 52
9. சருவ சிருட்டி 53
10. திதி 57
11. சங்காரம் 58
12. திரோபவம் 60
13. அநுக்கிரகம் 61
14. கர்ப்பக் கிரியை 62
15. மூவகைச் சீவ வர்க்கம் 68
16. பாத்திரம் 69
17. அபாத்திரம் 69
18. தீர்த்த உண்மை 70
19. திருக்கோயிற் குற்றம் 71
20. அதோமுக தரிசனம் 72
21. சிவநிந்தை கூடாமை 73
22. குரு நிந்தை கூடாமை 73
23. மாகேசுர நிந்தை கூடாமை 74
24. பொறையுடைமை 75
25. பெரியாரைத் துணைக்கோடல் 75

மூன்றாம் தந்திரம் 77

1. அட்டாங்க யோகம் 77
2. இயமம் 77
3. நியமம் 78
4. ஆதனம் 78
4. பிராணாயாமம் 79
6. பிரத்தியாகாரம் 81
7. தாரணை 82
8. தியானம் 84
9. சமாதி 86
10. அட்டாங்க யோகப் பேறு 88

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

11. அட்டமாசித்தி 89
12. கலை நிலை 98
13. காயசித்தி உபாயம் 100
14. கால சக்கரம் 102
15. ஆயுள் பரீட்சை 106
16. வார சரம் 108
17. வார சூலம் 109
18. கேசரி யோகம் 110
19. பரியங்க யோகம் 113
20. அமுரி தாரணை 116
21. சந்திர யோகம் 117

நான்காம் தந்திரம் 122

1. அசபை 122
2. திருவம்பலச் சக்கரம் 126
3. அருச்சனை 137
4. நவகுண்டம் 139
5. சத்திபேதம் அல்லது திரிபுரை சக்கரம் 143
6. வயிரவி மந்திரம் 147
7. பூரண சத்தி 153
8. ஆதார ஆதேயம் 157
9. ஏரொளிச் சக்கரம் 170
10. வயிரவச் சக்கரம் 174
11. சாம்பவி மண்டலச் சக்கரம் 175
12. புவனாபதிச் சக்கரம் 176
13. நவாக்கரி சக்கரம் 178

ஐந்தாம் தந்திரம் 191

1. சுத்த சைவம் 191
2. அசுத்த சைவம் 191
3. மார்க்க சைவம் 192
4. கடுஞ் சுத்த சைவம் 193
5. சரியை 194
6. கிரியை 195
7. யோகம் 196
8. ஞானம் 198
9. சன்மார்க்கம் 199
10. சகமார்க்கம் 201

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

11. சற்புத்திர மார்க்கம் 202
12. தாச மார்க்கம் 203
13. சாலோக மாதி 203
14. சாரூபம் 204
15. சாயுச்சம் 204
16. சத்திநிபாதம் 205
 1. மந்தம் 205
 2. மந்ததரம் 205
 3. தீவிரம் 206
 4. தீவிரதரம் 207
17. புறச்சமய தூடணம் 207
18. நிராசாரம் 210
19. உட்சமயம் 211
 சிவநெறிச் சிறப்பு 211

ஆறாம் தந்திரம் 214

1. சிவகுரு தரிசனம் 214
2. திருவடிப்பேறு 216
3. ஞாதுரு ஞான ஞேயம் 218
4. துறவு 219
5. தவம் 220
6. தவ தூடணம் 222
7. அருளுடைமையின் ஞானம் வருதல் 223
8. அவ வேடம் 225
9. தவவேடம் 226
10. திருநீறு 226
11. ஞான வேடம் 227
12. சிவ வேடம் 228
13. அபக்குவன் 229
14. பக்குவன் 230

ஏழாம் தந்திரம் 233

1. ஆறாதாரம் 233
2. அண்டலிங்கம் 234
3. பிண்டலிங்கம் 236
4. சதாசிவ லிங்கம் 237
5. ஆத்தும லிங்கம் 240
6. ஞானலிங்கம் 241
7. சிவலிங்கம் 242

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

8.	சம்பிரதாயம்	243
9.	திருவருள் வைப்பு	245
10.	அருளொளி	248
11.	சிவ பூசை	249
12.	குரு பூசை	252
13.	மாகேசுர பூசை	254
14.	அடியார் பெருமை	255
15.	போசன விதி	257
16.	பிட்சா விதி	258
17.	முத்திரை பேதம்	259
18.	பூரணக் குகைநெறிச் சமாதி	260
19.	சமாதிக் கிரியை	261
20.	விந்துற்பனம்	263
21.	விந்து சயம் - போக சர ஓட்டம்	265
22.	ஆதித்த நிலை - அண்டாதித்தன்	270
23.	பிண்டாதித்தன்	271
24.	மனவாதித்தன்	272
25.	ஞானாதித்தன்	272
26.	சிவாதித்தன்	274
27.	பசு லக்கணம் - பிராணன்	274
28.	புருடன்	275
29.	சீவன்	275
30.	பசு	276
31.	போதன்	276
32.	ஐந்திந்திரியம் அடக்கும் அருமை	277
33.	ஐந்திந்திரியம் அடக்கும் முறைமை	278
34.	அசற்குரு நெறி	280
35.	சற்குரு நெறி	281
36.	கூடா ஒழுக்கம்	283
37.	கேடுகண்டிரங்கல்	285
38.	இதோபதேசம்	288

எட்டாம் தந்திரம் **291**

1.	உடலில் பஞ்ச பேதம்	291
2.	உடல் விடல்	293
3.	அவத்தை பேதம் - கீழாலவத்தை	294
4.	மத்திய சாக்கிராவத்தை	297
5.	அத்துவாக்கள்	299

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6.	சுத்த நனவாதி பருவம்	300
7.	கேவல சகல சுத்தம்	305
8.	பராவத்தை	310
9.	முக்குண நிர்க்குணங்கள்	314
10.	அண்டாதி பேதம்	314
11.	பதினொன்றாந்தானமும்	314
12.	கலவு செலவுகள்	315
13.	நின்மலாவத்தை	315
14.	அறிவுதயம்	321
15.	ஆறந்தம்	323
16.	பதி பசு பாசம் வேறின்மை	328
17.	அடிதலை அறியும் திறங்கூறல்	331
18.	முக்குற்றம்	332
19.	முப்பதம்	332
20.	முப்பரம்	333
21.	பரலக்கணம்	334
22.	முத்துரியம்	336
23.	மும்முத்தி	337
24.	முச்சொரூபம்	338
25.	முக்கரணம்	339
26.	முச்சூனிய முத்தொந்தத்தசி	340
27.	முப்பாழ்	341
28.	காரிய காரண உபாதி	342
29.	உபசாந்தம்	342
30.	புறங்கூறாமை	343
31.	அட்ட தள கமல முக்குண அவத்தை	345
32.	நவாவத்தை அபிமானி	346
33.	சுத்தா சுத்தம்	348
34.	மோட்ச நிந்தை	349
35.	இலக்கணாத் திரயம்	350
36.	தத்துவமசி மகாவாக்கியம்	350
37.	விசுவக் கிராசம்	353
38.	வாய்மை	354
39.	ஞானிகள் செயல்	356
40.	அவா அறுத்தல்	356
41.	பத்தியுடைமை	357
42.	முத்தியுடைமை	359
43.	சோதனை	359

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒன்பதாம் தந்திரம் **361**

1.	குருமட தரிசனம்	361
2.	ஞானகுரு தரிசனம்	362
3.	பிரணவ சமாதி	364
4.	ஒளிவகை	365
5.	பஞ்சாக்கரம் தூலம்	367
6.	பஞ்சாக்கரம் - சூக்குமம்	369
7.	பஞ்சாக்கரம் - அதி சூக்கும்	369
8.	காரண பஞ்சாக்கரம்	370
9.	மகா காரண பஞ்சாக்கரம்	370
10.	திருக்கூத்து	371
11.	சிவானந்தக் கூத்து	371
12.	சுந்தரக் கூத்து	372
13.	பொற்பதிக் கூத்து	373
14.	பொற்றில்லைக் கூத்து	375
15.	அற்புதக் கூத்து	377
16.	ஆகாசப் பேறு	382
17.	ஞானோதயம்	383
18.	சத்திய ஞானானந்தம்	385
19.	சொரூப் உதயம்	386
20.	ஊழ்	388
21.	சிவ ரூபம்	389
22.	சிவ தரிசனம்	389
23.	முத்தி பேதம் கரும நிருவாணம்	390
24.	சூனிய சம்பாடணை	391
25.	மோன சமாதி	399
26.	வரையுரைமாட்சி	402
27.	அணைந்தோர் தன்மை	402
28.	தோத்திரம்	405
29.	சருவ வியாபகம்	411

திருச்சிற்றம்பலம்

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என் றுஉணர்.

- அவ்வையார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருமூலதேவ நாயனார்

அருளிச்செய்த

திருமந்திரம்

பத்தாம் திருமுறை

விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தபடி போற்றுகின் றேனே.

பாயிரம்

1. கடவுள் வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

ஒன்றவன் றானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந் தெட்டே. 1

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாம்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. 2

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கன்என் றேத்திடும் நம்பனை நாள்தொறும்
பக்கம்நின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றுகின் றேனே. 3

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்மெய்யைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே. 4

பெற்றமும் மானும் மழுவும் பிரிவற்ற
தற்பரன் கற்பனை யாகும் சராசரத்
தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே. 5

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே. 6

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றேன்
நந்தி அருளாலே மூலனை நாடினேன்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நான்இருந் தேனே. 7

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே. 8

நால்வரும் நாலு திசைக்கொன்றும் நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வரும் தேவராய் நாதரா னார்களே. 9

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே. 10

எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்மின் என்றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. 11

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புத்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்
நந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே. 12

செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தான்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில்ஒரு கோடி யுகமிருந் தேனே. 13

இருந்தஅக் காரணம் கேள்இந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. 14

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேன்நின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால். 15

மாலாங்க னேஇங் கியான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. 16

நேரிழை யாவாள் நிரதி சயானந்தப்
பேருடை யாள்என் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவன் ஆவடு தண்டுறை
சீருடை யாள்பதம் சேர்ந்திருந் தேனே. 17

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. 18

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே. 19

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்திலர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. 20

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தன்னுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே. *

செய்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. *

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே. 21

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறும் மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. 22

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே. 24

அங்கி மிகாமைவைத் தான்உடல் வைத்தான்
எங்கும் மிகாமைவைத் தான்உல கேழையும்
தங்கி மிகாமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமைவைத் தான்பொருள் தானுமே. 24

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை அகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே. 25

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பிற் கயிலை வழியில்வந் தேனே. 26

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான்இருந் தேனே. 27

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கிய மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கி யுரோமம் ஒளிவிடுந் தானே. 28

பிதற்றுகின் றேன்என்றும் பேர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
உயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனும் ஆமே. 29

ஆர்அறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
ஆர்அறி வார்அவ் வகலமும் நீளமும்
பேர்அறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர்அறி யாமை விளம்புகின் றேனே. 30

பாடவல் லார்நெறி பாடஅறிகி லேன்
ஆடவல் லார்நெறி ஆடஅறிகி லேன்
நாடவல் லார்நெறி நாடஅறிகி லேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. 31

மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலும் ஆமே. 32

தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேறாய் இருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயன்அறி யாரே. 33

மூலன் உரைசெய்த மூவாயி ரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காலை எழுந்து கருத்திற் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணலும் ஆமே. 34

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தரும்இவை தானே. *

வந்த மடம்ஏழு மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரைத்
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே. *

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. *

முதல் தந்திரம்

1. சிவபரத்துவம்

திருச்சிற்றம்பலம்

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 1

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. 2

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னையப் பாஎனில் அப்பனு மாய்உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. 3

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயனு மல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. 4

பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே. 5

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன்றில்லை
முயனும் முயலின் முடிவும்மற் றாங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே. 6

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே. 7

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னைமேல் அளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. 8

அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி 7
அடிக்கண் டிலேனென் றச்சுதன் சொல்ல
முடிகண்டே னென்றயன் பொய்மொழிந் தானே. 9

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்அம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே. 10

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. 11

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரருந் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே 12

காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்
மாயங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே. 13

அதிபதி செய்து அளகையர் வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
அதுபதி யாதரித் தாக்கம தாக்கின்
இதுபதி கொள்ளென்றான் எம்பெரு மானே. 14

இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே. 15

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறனெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்றம் அலையது தானே. 16

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ னெனில்தாம் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பார் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின்றானே. 17

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர்தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே. 18

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்ல
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே. 19

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

காணநில் லாயடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய னாகி அமர்ந்து நின் றானே. 20

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே. 21

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றும்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
புணர்ந்திருந் தானடிப் புண்ணிய மாமே. 22

சந்தி எனத்தக்க தாமரை வாள்முகத்
தந்திமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படும்அவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. 23

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. 24

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. 25

வானின் றழைக்கும் மழைபோல் இறைவனும்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே. 26

மண்ணகத் தான்ஒக்கும் வானகத்தான் ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. 27

Center for Shaiva Studies, Pondicherry Collection

